DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 70/2021

**அ.சா.5/ புவனேஸ்வரன் / 03.11.2025**

1வது, 2வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு அனுமதியுடன் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

ராமராஜ் இறந்துகிடந்தது எனக்கு ஊர்க்காரர்கள் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். எதிரிகளும் ராமராஜ் என்பவரும் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எப்படி இறந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்த ராமராஜ் என்பவருக்கும் எதிரிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஏற்கனவே நான் முதல்விசாரணையில் ”இரவில் சம்பவத்தில் சதீஷ்குமாரும் இறந்த ராமராஜ் என்பவரும் சத்தம் போட்டுக்கொண்டிருப்பதால்” இந்த சம்பவம் நடத்திருக்கலாம் என்றும் எனது பெரியம்மா ஜானகியம்மாள் என்பவரிடம் இறந்த விசயத்தை சொன்னேன் என்றும் மேற்படி சங்கதிகளை போலீசார் சொல்லிக்கொடுத்துதான் சொன்னேன் என்றால் சரிதான்.

**அரசுதரப்பு மறுவிசாரணை:**

ஏற்கனவே நான் சொன்ன செய்திகள் போலீசார் சொல்லித்தான் சொன்னேன் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. தற்போது என் உறவினர்கள் சொன்னதால் நான் இந்த செய்திகளை நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றும், மேலும் எதிரிகளின் பகை எனக்கு வந்துவிடுமோ என்று அஞ்சியே முதல்விசாரணையில் சொன்னதை மாற்றி தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:** இல்லை.

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.02 16:38:57 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை